REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 நவம்பர் 9 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 88 இல. 266 | November 09, Monday, 2020 | 20பக்கங்கள் | 30/-

இன்று முதல் நிர்ணய விலைக்கு அரிசி

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு இன்று முதல் அரிசியை கொள்வனவு செய்ய முடியும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.அது தொடர்பில் தனியார் வர்த்தகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ள 06

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவோம்

ஜோ பைடனுக்கு ஜனாதிபதி கோட்டாய வாழ்த்து

அமெரிக்காவின் ஜனாதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜோ பைடனுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜோ பைடனுக்கு தனது ருவிட்டர் பக்கத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

குறித்த வாழ்த்துச் செய்தியில், வரலாற்று நிகழ்வான உங்களது வெற்றிக்கு வாழ்த்துக்கள். மேலும் எமது இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த உங்களுடன் பணியாற்ற எதிர்பார்க்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோ பைடன், 290 06

பிளவுபட்டிருக்கும் அமெரிக்காவை ஒன்றுபடுத்தும் நேரம் வந்துள்ளது

தேர்தலில் வெற்றிபெற்ற ஜோ பைடன் வெற்றி உரையில் தெரிவிப்பு

ஆழமாக பிளவுபட்டிருக்கும் அமெரிக்காவை ஒன்றுபடுத்தும் நேரம் வந்திருப்பதாக ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஜோ பைடன் ஆற்றியுள்ள உரையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், தனக்கு வாக்களிக்காத மக்கள், தனக்கு வாக்களித்தவர்களுக்காக வாய்ப்பொன்றை வழங்க வேண்டும் எனவும் 06

இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்த இணைந்து பயணிப்போம்

ஜோ பைடனுக்கும் கமலாவுக்கும் பிரதமர் வாழ்த்து

அமெரிக்காவின் 46 வது ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள ஜோ பைடன் மற்றும் உப ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள கமலா ஹாரிஸ் ஆகியோருக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் தனது உத்தியோகபூர்வ ட்விட்டர் பக்கத்தில் இந்த வாழ்த்தினை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான 72 வருட கால இராஜதந்திர உறவினை மேலும் வலுப்படுத்துவதற்கு குறித்த இரு வருடனும், இணைந்து பயணிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட பொலிஸ் பிரிவுகளை த

ஊரடங்கு இன்று முத

CLICK

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

மேல் மாகாணம் உட்பட சில பகுதிகளுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தலுக்கான ஊரடங்குச் சட்டம் இன்று அதிகாலை 5.00 மணிக்கு தளர்த்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனினும், கொரோனா வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டிருக்குமென இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க மேல் மாகாணத்தின் சில பொலிஸ் பிரிவுகள் உட்பட மேலும் சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. 06

சுகாதார அறிவுரைகளை பின்பற்றாவிடின் 7 வருடசிறை

நிறுவனத் தலைவர்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

பக்கம் 03

சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி கூட்டம்

யாழில் அமைச்சர் நாமல் தலைமையில்

சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழுவின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிற்கான கூட்டமானது யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்ட குழுவினால் இது 06

வரலாற்று வெற்றிக்கு எனது வாழ்த்துக்கள்

ஜோ பைடனுக்கு சஜித் வாழ்த்து

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற ஜோ பைடனுக்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,...

உங்கள் வரலாற்று வெற்றிக்கு எனது வாழ்த்துக்கள் 06

அதிவேக சாலைகள் இன்று முதல் திறப்பு

மேல் மாகாணத்திற்குட்பட்ட அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகளும் இன்று முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று மரணம் எண்ணிக்கை 34 ஆக உயர்வு

நேற்று முன்தினம் இரவு நால்வர் மரணம்

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் கொரோனா வைரஸ் பாதிப்பினால் மரணமடைந்த நோயாளிகளின் எண்ணிக்கை 34 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் மேலும் நால்வர் உயிரிழந்துள்ளதாகவும் அவர்களில் மூவர் பெண்கள் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

கொழும்பு மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்த 69 வயதான பெண் உயிரிழந்துள்ளார். நீண்ட காலமாக 06

மேல் மாகாணத்தில் அனைத்து ரயில் சேவைகளும் வழமைக்கு

இலங்கை ரயில்வே திணைக்களம் அறிவிப்பு

மேல் மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு தளர்த்தப்படவுள்ள நிலையில் அனைத்து அலுவலக ரயில்களையும் இன்று முதல் இயக்கப் போவதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு நீக்கப்படாத பகுதிகளில் ரயில்கள் நிறுத்தப்படமாட்டாது என்று புகையிரத பொது 06

அரச நிறுவனங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரிகளே சேவை

ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டாலும் அரச நிறுவனங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாத்திரமே சேவையாட்களை இணைத்துக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பொது நிர்வாக அமைச்சு அறிக்கை மூலம் அறிவித்துள்ளது. மேல் மாகாணம் உட்பட பல பகுதிகளில் தற்போது அமுலில் 06

நீர் கட்டணங்களை செலுத்த சலுகை காலம் வழங்கல்

அன்டிஜென் பரிசோதனையுடன் PCR சோதனைகளும் நடைபெறும்

குறைக்கப்பட மாட்டாது என்கிறார் Dr.சுதத் சமரவீர

கொரோனா தொற்றினை விசேட வைத்திய நிபுணர் சுதத்

இன்று முதல் பேருந்துகளில் பயணிக்க புதிய நடைமுறை

அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிப்பு

போக்குவரத்து தொடர்பில் 3 நடைமு

மேல் மாகாணத்தில் மின் விநியோகம் துண்டிப்பு இல்லை

மேல் மாகாண மின்பாவனையாளர்கள் மாத மின் கட்டணத்தை செலுத்த தாமதம்